தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 05/பேரூ/2022

நாள் 12.05.2022

திரு. M.ராஜசேகரன்,
பொத்தனூர், நாமக்கல் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
P. வேலூர் பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம் ... எதிர்மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் மற்றும் அஞ்சல், எண்.27/8 கிழக்குத் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. M. ராஜசேகரன் என்பவரின் 08.11.2021 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.11.2021ல் பெறப்பட்டு, 05/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் மற்றும் அஞ்சல், எண்.27/8 கிழக்குத் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. M. ராஜசேகரன் தமது புகார் மனுவில் P.வேலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் மின்சாதனம் மற்றும் மரச்சாமான்கள் (Furniture) விற்பனை செய்யும் பெருமாள் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் பர்னிச்சர் கடை நகர் ஊரமைப்புத் துறையின் (Directorate of Town and Country Planning) அனுமதியைப் பெறாத நிலையில், மேற்படி கடை P. வேலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் இயங்கிவருவதால், முறையாக அனுமதிபெறாத அக்கடையினை அப்புறப்படுத்திடவும், அனுமதி பெறாமல் இயங்கிவந்த அக்கடையினை முறையாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்காத P.வேலூர் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும்,

முறையாக அக்கடையில் பணியாற்றிவந்த பணியாளர்களிடமிருந்து தொழில்வரியை வசூலிக்கத் தவறிய முன்னாள்/இந்நாள் செயல் அலுவலர்களிடமிருந்து அத்தொகையை வசூல் செய்திடவும் ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார். மனுதாரர் தனது புகார் குறித்து பொது தகவல் அலுவலர் மற்றும் செயல் அலுவலர், வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி மூலம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்ட 10.05.2021 நாளிட்ட பதிலறிக்கையின் நகலினை தனது புகாருக்கான ஆதார ஆவணமாக இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

2. வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 11.04.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 16.03.2022 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் 11.4.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராக இம்முறைமன்ற நடுவத்திற்கு வந்திருந்து உரிய பதிவேட்டில் விவரங்களை பதிவிட்டு கையொப்பமிட்டிருந்த நிலையில், நேரடி விசாரணையில் ஆஜராகாமல் இம்முறைமன்ற நடுவத்திலிருந்து சென்றுவிட்டார். வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 11.4.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

“நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி திருவள்ளுவர் சாலையில் அமைந்துள்ள பெருமாள் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் பர்னிச்சர்ஸ் கடைக்கான கட்டட வரைபட அனுமதி 28.8.2017 அன்று பெறுப்பட்டு, கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 2019–2020ஆம் ஆண்டு சொத்துவரி விதிக்கப்பட்டு, 2021–2022 வரை நிலுவையின்றி வசூலிக்கப்பட்டுவிட்டது என்றும், அதே போன்று சொத்துவரி, தொழில் வரி மற்றும் உரிமக் கட்டணம் ஆகியவற்றை கட்டட உரிமையாளர் தற்போது வரை முறையாக செலுத்தியுள்ளார் எனவும், எனவே மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள புகார்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை எனவும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

3. வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரரது புகார் மனு மீது அளித்துள்ள 31.3.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் நாமக்கல் மாவட்டம், வேலூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் சாலையில் அமைந்துள்ள பெருமாள் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் பர்னிச்சர்ஸ் உரிமையாளர் திரு. பெ. முருகவேல் என்பவர் வணிக கட்டிடத்திற்கான கட்டிட வரைபட அனுமதி எண்.523/2017 நாள் 28.8.2017ன்படி பெற்று, கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 2019–2020ஆம் ஆண்டு சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு, வரிவிதிப்பு எண்.8971, 8972 மற்றும் 3318–ன்படி ரூ.4,918/– + ரூ.4,918/– + ரூ.900/– என நிர்ணயம் செய்யப்பட்டு, 2021–2022ஆம் ஆண்டுவரை நிலுவையின்றி சொத்துவரி செலுத்தி வருகிறார். மேலும், கட்டிடம் 1200 சதுர அடிக்கு குறைவாக உள்ளதால் பேரூராட்சியின் மூலம் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளதென்றும், இந்நிறுவனத்திற்கு தொழில்வரி விதிக்கப்பட்டு, வரிவிதிப்பு எண்.540–ன்படி ரூ.930/–ஐ முறையாக 2021–2022ஆம் ஆண்டுவரை நிலுவையின்றியும் செலுத்திவருகிறார். மேற்படி

நிறுவனத்திற்கு தொழில் உரிமக் கட்டணம் (Trade Licence Fees) ரூ.937/– விதிக்கப்பட்டு, அதனையும் 2021–2022 வரை நிலுவையின்றி செலுத்தியுள்ளார். எனவே, பெருமாள் எலக்ட்ரானிக்ஸ் அண்டு பர்னிச்சர்ஸ் எனும் நிறுவனத்திடமிருந்து சொத்துவரி, தொழில்வரி, தொழில் உரிமக் கட்டணம் ஆகிய அனைத்தும் பேரூராட்சிக்கு எவ்வித நிதியிழப்புமின்றி வசூலிக்கப்பட்டுள்ளதாக செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும், சொத்துவரி விதிப்புப் படிவம், சொத்துவரி, தொழில்வரி, தொழில் உரிமக் கட்டண இரசீதுகளின் நகல்களையும் தமது அறிக்கையுடன் பரமத்தி வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

4. வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 11.4.2022 அன்றைய நேரடி விசாரணையின்போது அளித்துள்ள தமது அறிக்கையில், 31.3.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் தெரிவித்திருந்த விவரங்களையே மீண்டும் குறிப்பிட்டுள்ளார். மேற்கண்ட புகார் மனு தொடர்பான ஆவணங்களின் நகல்களையும் தமது அறிக்கையுடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமப்பித்துள்ளார்.

6. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், பரமத்தி வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம், விளக்க அறிக்கை மற்றும் நேரடி விசாரணையின்போது அளித்துள்ள 11.4.2022 நாளிட்ட கூடுதல் அறிக்கை ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள 08.11.2021 நாளிட்ட புகார் மனுவில் P.வேலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் மின்சாதனம் மற்றும் மரச்சாமான்கள் (Furniture) விற்பனை செய்யும் பெருமாள் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் பர்னிச்சர் கடை நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதியைப் பெறாத நிலையில், மேற்படி கடை P. வேலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் இயங்கிவருவதால், முறையாக அனுமதிபெறாத அக்கடையினை அப்புறப்படுத்திடவும், அனுமதி பெறாமல் இயங்கிவந்த அக்கடையினை முறையாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்காத P.வேலூர் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும், அக்கடையில் பணியாற்றிவந்த பணியாளர்களிடமிருந்து தொழில்வரியை முறையாக வசூலிக்கத் தவறிய முன்னாள்/இந்நாள் செயல் அலுவலர்களிடமிருந்து அத்தொகையை வசூல் செய்திடவும் ஆணையிடுமாறும் கோரியுள்ளார்.

- மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன்கீழ் பொது தகவல் அலுவலர் மற்றும் செயல் அலுவலர், பரமத்தி வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி அவர்களால் வழங்கப்பட்டுள்ள 10.05.2021 நாளிட்ட பதிலறிக்கையின் நகலினை தனது புகாருக்கான ஆதார ஆவணமாக இணைத்தனுப்பிவைத்துள்ளார்.

- பரமத்தி வேலூர் பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கையின்படி நாமக்கல் மாவட்டம், வேலூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் சாலையில்

அமைந்துள்ள பெருமாள் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் பர்னிச்சர்ஸ் உரிமையாளர் திரு. பெ. முருகவேல் என்பவர் வணிக கட்டிடத்திற்கான கட்டிட வரைபட அனுமதி எண்.523/2017 நாள் 28.8.2017ன்படி பெற்று, கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின் 2019–2020ஆம் ஆண்டு சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு, வரிவிதிப்பு எண்.8971, 8972 மற்றும் 3318–ன்படி ரூ.4,918/– + ரூ.4,918/– + ரூ.900/– என நிர்ணயம் செய்யப்பட்டு, 2021–2022ஆம் ஆண்டுவரை நிலுவையின்றி சொத்துவரியையும் செலுத்தி வருகிறார் என்பது ஆவணங்களின் மூலம் அறியப்படுகிறது. எனினும், சொத்துவரி இரசீது நகல்கள் 2021–2022 (எப்ரல்–மார்ச்) மட்டுமே இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கப்பட்டுள்ளதால், இதற்கு முந்தைய ஆண்டிற்கும், அதாவது கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் 2019–2020ஆம் ஆண்டு முதல் சொத்துவரி அனைத்தும் பேரூராட்சியினால் வசூலிக்கப்பட்டுள்ளதை பேரூராட்சி நிர்வாகம் உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

- மேலும், கட்டிடம் 1200 சதுர அடிக்கு குறைவாக உள்ளதால் பேரூராட்சியின் மூலம் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளதென்றும், இந்நிறுவனத்திற்கு தொழில்வரி விதிக்கப்பட்டு வரிவிதிப்பு எண்.540–ன்படி ரூ.930/–ஐ முறையாக 2021–2022ஆம் ஆண்டுவரை நிலுவையின்றியும் செலுத்திவருகிறார். மேற்படி நிறுவனத்திற்கு தொழில் உரிமக் கட்டணம் (Trade Licence Fees) ரூ.937/– விதிக்கப்பட்டு, அதனை 2021–2022 வரை நிலுவையின்றி செலுத்தியுள்ளார். எனவே, பெருமாள் எலக்ட்ரானிக்ஸ் அண்டு பர்னிச்சர்ஸ் எனும் நிறுவனத்திடமிருந்து சொத்துவரி, தொழில்வரி, தொழில் உரிமக் கட்டணம் ஆகிய அனைத்தும் பேரூராட்சிக்கு எவ்வித நிதியிழப்புமின்றி வசூலிக்கப்பட்டுள்ளதாக செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.
- மனுதாரர் நாமக்கல் மாவட்டம், வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8, கைக்கோளர் தெரு, சர்வே எண்.495/4இல் தன்னால் கிரையம் பெற்றுள்ள 975 சதுரடி விஸ்தீரணமுள்ள இடத்தின் ஆவண நகல் மற்றும் தம்மால் சமர்ப்பிக்கப்பட்ட இதர ஆவணங்களின் அடிப்படையில், வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் நடவடிக்கைகள் மூ.மு.எண்.523/2017/அ4 நாள் 24.8.2017ன்படி கட்டடம் கட்டிக்கொள்ள, நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி பெற்றுள்ளார்.
- பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ள கட்டிட வரைபட அனுமதியின்படி தரைதளம் மற்றும் முதல் தளம் இரண்டும் கட்டிக்கொள்ள அனுமதிக்கப்பட்டு, கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர், வணிக ரீதியிலான பயன்பாட்டின் அடிப்படையில் வரிவிதிப்புப் படிவம் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில், சொத்துவரி ரூ.4,918/–, + ரூ.4,918 மற்றும் ரூ.900/– (சொத்து வரி மற்றும் திடக்கழிவு சேவைக் கட்டணம் உட்பட) நிர்ணயிக்கப்பட்டு அதனை மனுதாரர் 2021–2022 (ஏப்ரல்–மார்ச்) வரை முறையாக செலுத்தியுள்ளார் என்பது ஆவணங்களின் அடிப்படையில் தெளிவாகிறது.
- மேலும் வரிவிதிப்பு எண்.540ன்படி ஸ்ரீ பெருமாள் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் பர்னிச்சர்ஸ் நிறுவன உரிமையாளர் திரு. பெ. முருகவேல் 2021–2022 (எப்ரல்–மார்ச்) வரையிலான காலத்திற்கான தொழில் வரி ரூ.930/–ஐ (ரூபாய் தொள்ளாயிரத்து முப்பது மட்டும்) செலுத்தியுள்ளார் என்பதும் தெளிவாகிறது. மேலும்,

அந்நிறுவனத்தில் பணியாளர்கள் எவரும் இல்லாததால், அந்நிறுவனத்திற்கு மட்டும் தொழில்வரி வசூலிக்கப்பட்டுள்ளதாக வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் சாலையில் அமைந்துள்ள பெருமாள் எலக்ட்ரானிக்ஸ் அண்டு பர்னிச்சர்ஸ் கடை 1200 சதுர அடிக்கு குறைவாக உள்ள நிலையில், பரமத்தி வேலூர் பேரூராட்சியின் மூலம் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டு, வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டு, முறையாக நிலுவையின்றி வணிக ரீதியில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருவது தெளிவாகிறது. எனவே, மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளதுபோல மேற்கண்ட கட்டிடத்திற்கான அனுமதி நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து பெறப்பட்டிருக்கவேண்டுமென்ற அவசியம் எழவில்லை. மேலும், கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு, 2019–2020ஆம் ஆண்டு சொத்துவரி விதிக்கப்பட்டு, நிலுவையின்றி கட்டிட உரிமையாளரால் செலுத்தப்பட்டு வருவதும், மேற்படி நிறுவனத்திற்கான தொழில் உரிமக் கட்டணம் மற்றும் நிறுவனத்திற்கான தொழில்வரி விதிக்கப்பட்டு அதுவும் முறையாக செலுத்தப்பட்டு வருவதும் வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கையின்படி ஊர்ஜிதமாகிறது.

மேலும், பெருமாள் எலக்ட்ரானிக்ஸ் அண்டு பர்னிச்சர்ஸ் எனும் நிறுவனத்திடமிருந்து சொத்துவரி, தொழில்வரி, தொழில் உரிமக் கட்டணம் ஆகிய அனைத்தும் பேரூராட்சிக்கு எவ்வித நிதியிழப்புமின்றி வசூலிக்கப்பட்டுள்ளதாகவும் செயல் அலுவலர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிலையில், வரி விதிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ள காலத்திலிருந்து இதுவரை நிலுவை ஏதுமின்றி முறையாக செலுத்தப்பட்டு வந்துள்ளதாக செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், வரி இனங்களுக்கு 2021–2022ஆம் ஆண்டுக்கான வரி வசூல் இரசீது நகல்களை மட்டுமே இம்முறைமன்ற நடுவத்திற்கு வழங்கப்பட்டுள்ளதால், பேரூராட்சியின் வரியினங்களில் வசூலிக்கப்படவேண்டிய நிலுவை இனங்கள் ஏதும் இல்லை என்பதை வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் உறுதிபடுத்திக்கொள்ளுமாறு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களின் அடிப்படையில், இம்முறைமன்ற நடுவத்தில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகார் ஏதும் நிரூபணமாகவில்லை என்பது பரமத்தி வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை, வாக்குமூலம் மற்றும் புகார் தொடர்பான ஆவணங்களின்படி தெளிவாகிறது.

அதேவேளையில், இம்முறைமன்ற நடுவத்திற்கு தொடர்ந்து பல்வேறு புகார் மனுக்களை அளித்துவரும் மனுதாரர், பேரூராட்சி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் மூலம் பெறப்படும் தகவல்களின் அடிப்படையில், தன்னால் சமர்ப்பிக்கப்படும் புகார்களுக்கு ஆதாரம் உள்ளதாகக் கூறி, அரசு அலுவலர்கள் மீது புகார்களை அளித்து வந்துள்ளதை இம்முறைமன்ற நடுவம் அறிந்துள்ளது. ஆயினும், இம்முறைமன்ற நடுவத்தினால்

அனுமதிக்கப்படும் புகார்கள் குறித்து மனுதாரர் தனது தரப்பிலான விளக்கங்களை முன்வைத்திடவும், தனது புகார் மீதான ஆதார ஆவணங்களை சமர்ப்பித்து நிரூபிக்க அளிக்கப்படும் நேரடி விசாரணையை பயன்படுத்திக் கொள்ளாமல், **11.4.2022 அன்றைய** நேரடி விசாரணைக்கு மனுதாரர் அழைக்கப்பட்டு அதன்பேரில் இம்முறைமன்ற நடுவத்திற்கு வந்திருந்து உரிய பதிவேட்டில் கையொப்பமிட்ட நிலையில், முறைமன்ற நடுவத்தின் முன் நேரடி விசாரணையில் ஆஜராகாமல் இம்முறைமன்ற நடுவ வளாகத்திலிருந்து தாமாகவே சென்றுவிட்டார். மனுதாரரின் இச்செயல் இம்முறைமன்ற நடுவத்தினை அவமதிக்கும் செயலாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மனுதாரரின் இச்செயல் மிகவும் வன்மையாக கண்டிக்கப்படுகிறது. இனிவரும் காலங்களில் மனுதாரர் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என மனுதாரரை இம்முறைமன்ற நடுவம் எச்சரித்தும் ஆணையிடுகிறது.

2022ஆம் ஆண்டு, மே திங்கள் 12 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x x x

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. M. ராஜசேகரன்,
27/8 கிழக்குத் தெரு, பொத்தனூர் மற்றும் அஞ்சல், நாமக்கல் மாவட்டம்–738 181
செயல் அலுவலர்,
பரமத்தி வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி, பரமத்தி வேலூர், நாமக்கல் மாவட்டம்–638 182
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், சேலம் மண்டலம், சேலம்–1
பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

-/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

16/5/22

செயலர்

16.5.2022

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை –600 032